109--

சத்தியமங்கலம் தொகுதியில் தொழிற்பேட்டை அமைத்தல்.

22162-திருமதி அ. தி. சரஸ்வதி:

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

சத்தியமங்கலம் தொகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத்தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சத்தியமங்கலம் தொகுதியில் குறைந்த அளவில் 10 தொழில் முனைவோர் தகுந்த திட்டக் குறிப்புடன் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் உதவியை நாடினால் அப்பகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாளவாடி பகுதியில், மற்ற பகுதிகளில் இருந்து உற்பத்தியாகும் பட்டுக் கூடுகளைக் கர்நாடக மாநிலத்திற்கு விற்பனை செய்ய விவசாய மக்கள் செல்கிறார்கள். விவசாய மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழும் ஒப்பற்ற தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் தாளவாடி விவசாய மக்களின் நலன் கருதி, தாளவாடிப் பகுதியிலே பட்டு விற்பனைக் கூடம் அமைக்கவும், கர்நாடக அரசு பட்டுக்கூடுகளுக்கு நிர்ணயிக்கும் விலையை நமது அரசும் விவசாய மக்களின் வாழ்வு மலர, பட்டுக்கூடுகளின் விலையை உயர்த்தவும், அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலம் அறிய விரும்புகிறேன்.,

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இப்போது கேட்கின்ற கேள்விக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இருப்பினும் அவர்களுடைய கோரிக்கை கருணையோடு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 110, திரு. கே. மரியம் உல் ஆசியா; மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

110--

தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்ட சாலைகளுக்கு தனிப் பெயர் சூட்டுதல்:

24307-திருமதி கே. மரியம் உல் ஆசியா:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

1993 டிசம்பர் 31]

தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அமைக்கப்படும் சாலைகளை மற்ற சாலைகளிலிருந்து வேறுபடுத்திக்காட்ட தனிப் பெயர் சூட்டுகின்ற செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் ஊரகச் சாலைகளுக்கு தனிப்பெயர் சூட்டுகின்ற செயற்குறிப்பு ஏதும் வேளாண்மைத்துறையில் இல்லை.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபிறகு, எல்லாத் துறைகளிலுமே மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய புரட்சிகரமான திட்டங்களை வகுத்து சிறப்பான முறையில் செயலாற்றி வருகின்ற டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் போடப்படுகின்ற 800 கிலோ மீட்டர் நீளத்தில் 45 கோடிக்கு மேல் பணம் செலவு செய்கின்ற இந்தச் சாலைகளுக்கு மற்ற சாலைகளைக் காட்டிலும்--தேசிய நெடுஞ்சாலைகள், நெடுஞ்சாலைகள், மாவட்டச் சாலைகள், கரும்பு அபிவிருத்தித் திட்டச் சாலைகள், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் போடப்படுகின்ற சாலைகள், யூனியன் சாலைகள் போன்ற மற்ற சாலைகளைக் காட்டிலும் வேறுபடுத்திக் காட்டுவதற்காக, வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் போடப்படுகின்ற இந்தச் சாலைகளுக்கு, மீண்டும் அரசு பரிசீலனை செய்து புதிய பெயர் சூட்டப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கிய விற்பனை மையங்களை இணைக்கும் ஊரகச் சாலைகளின் தரத்தை உயர்த்த, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், விவசாயிகள் தங்களுடைய விளைபொருட்களை விற்பனை மையங்களுக்குச் சுலபமாகவும், துரிதமாகவும் எடுத்துச் சென்று அதன் மூலம் நல்ல விலை பெறுவதற்காக, கிராமப் புறங்களில் உள்ள இத்தகைய சாலைகளை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற உயரிய நோக்கோடு இருபது விற்பனை மையங்களை இணைக்கும் 800 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் ரூபாய் 54 கோடியே 54 இலட்சத்தில் செலவிட்டு, இச்சாலைகளைப் புதிதாகப்போட்டு வருகிறார்கள். இச்சாலைகள் பிற சாலைகளைவிட அதிக நிதி ஒதுக்கீட்டிலும், அதிகச் செலவினத்திலும் மேம்படுத்தப்பட்ட சாலைகளாக இருக்கின்றன. இந்தச் சாலைகள், பிற சாலைகளிலிருந்து உயர்ந்த நிலையில் இருக்கின்ற காரணத்தால், இச்சாலைகளின்

இருமருங்கிலும் குளிர் தரும் மரங்கள் வைக்கப்படும். அதைப்போல, இச் சாலைகளுக்கு, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடன் கலந்துபேசி, இச்சாலைகளைப் பிற சாலைகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டக் கூடிய அளவுக்கு அந்தச் சாலைகளின் முகப்பிலே ஒரு இலச்சினை பொறிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. து. வரதராஜன்.

திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பல சாலைகள் அமைக்கின்ற திட்டம் இருந்தாலும், கரும்பு ஆலைகளில் இருக்கின்ற நிதி நெருக்கடியில், நிதி ஒதுக்கீடு செய்து எண்ணற்ற கரும்பு ஆலைகளிலிருந்து இந்தச் சாலைகளை அமைக்காமல் நிலுவையில் இருப்பதால் - அதனைத் துரிதமாகச் செய்து கிராமங்களுக்கு இந்தச் சாலைகளை இணைப்பு செய்ய அரசிடம் திட்டம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.40

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு அபிவிருத்திச் சாலை என்பது தனியாகப் போடப்படுகின்ற சாலை. இந்தச் சாலைகள், விவசாயிகள் தங்களுடைய விளை பொருள்களை பிரதான சாலைக்குக் கொண்டுவரக்கூடிய சாலைகள் திட்டத்தின்கீழ் போடப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 111, திருமதி கற்பகம் இளங்கோ; மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்.

111–

காரைக்குடியில் பால் விற்பனை நிலையம் அமைத்தல்:

*** 20105–திருமதி கற்பகம் இளங்கோ:**

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

காரைக்குடி நகரத்தில் மெ.மெ. வீதி சந்தைப்பேட்டை சந்திப்பு, கீழஊரணி, முத்துப்பட்டிணம் ஆகிய இடங்களில் பால் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். காரைக்குடி பால் பண்ணையின் சார்பாக முத்துப்பட்டிணம் அருகில் 15-7-1993 அன்று பாலகம் அமைக்கப்பட்டு பால் விற்பனையாகி